# தேனி மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறை ஆணைகள்

## பிறப்பிப்பவர்: திருமதி.ஆர்.வி.ஷஜீவனா, இ.ஆ.ப.,

**ந.க.எண்: 13261/2022/ஆ3** **நாள்: 18 .11.2023**

| | | |
|---|---|---|
| பொருள்: | நிலம் - தேனி மாவட்டம் - ஆண்டிபட்டி வட்டம் - வருசநாடு - வாலிப்பாறை சாலை - கி.மீ.0/0 முதல் 9/720 தரம் உயர்த்துதல் - போடிநாயக்கனூர் வட்டம், வடக்குமலை கிராமம், புல எண்கள்.866, 867, 869, 870, 871ல் மொத்த விஸ்தீரணம் 3.84.5 ஹெக்டேர் நிலத்தினை வனபகுதி நிலமான 1.88.18 ஹெக்டேர் நிலத்திற்கு பதிலாக மாற்று நிலமாக வழங்கி ஆணையிடப்பட்டது - புல எண்.870-இல் கருப்பசாமி கோவில் மற்றும் பாதை அமைந்துள்ளதாக திருத்திய அறிக்கை, வரைபடம் வரப்பெற்றது - புல எண்கள்.866, 867, 869, 870, 871 ஆகியவற்றில் மொத்தம் 3.79.80 ஹெக்டேர் நிலத்தினை வனத்துறைக்கு மாற்று நிலமாக திருத்திய ஆணை வழங்கி ஆணையிடப்படுகிறது. | |
| பார்வை: | 1. | அரசாணை நிலை(2D) எண்.85/நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகத்துறை (HF-1) நாள்:27.11.2018 |
| | 2. | வனச்சரக அலுவலர், வருசநாடு வனச்சரகம்(இருப்பு), மயிலாடும்பாறை அலுவலக கடிதம் ந.க.எண்.183/2019 நாள்.13.08.2019. |
| | 3. | வன உயிரின காப்பாளர், மேகமலை வன உயிரினக் கோட்டம், தேனி அவர்களின் ந.க.எண்.16/2020/வ1, நாள் 10.08.2020 |
| | 4. | மதுரை நபார்டு மற்றும் கிராம சாலைகள் கோட்டப்பொறியாளர் (நெ) கடிதம் ந.க.எண்: 180ஆ/2021/இநிவ, நாள்: 23.03.2022 மற்றும் 27.05.2022 |
| | 5. | போடிநாயக்கனூர் வட்டாட்சியர் அலுவலக கடிதம் ந.க.எண். 1553/2022/அ3 நாள்.30.07.2022 |
| | 6. | உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் கடிதம் ந.க.எண்: 4184/2022/அ5, நாள்: 18.08.2022. |
| | 7. | இயக்குநர், நில அளவை மற்றும் நிலவரித்திட்டம், சென்னை-5 அவர்களின் கடிதம் ந.க.எண்.ஆ1/2833/2022 நாள்.28.09.2022 |
| | 8. | தேனி மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்.13261/2022/ஆ3 நாள் : 07.11.2022 |
| | 9. | போடிநாயக்கனூர் அனைத்து விவசாயிகள் மற்றும் குத்தகைதாரர்கள் நலச்சங்கம் மனு நாள்04.05.2023 |
| | 10. | கோட்டப்பொறியாளர்(நெ), நபார்டு மற்றும் கிராமச்சாலைகள், மதுரை அலுவலக கடிதம் எண்.180/2022/JDO நாள்.23.12.2022 |
| | 11. | வனநிலவரித்திட்ட அலுவலர், போடிநாயக்கனூர் அலுவலக கடிதம் ந.க.எண்.104/2023 நள்.16.06.2023 |
| | 12. | வட்டாட்சியர், போடிநாயக்கனூர் அலுவலக கடிதம் ந.க.எண்.1553/2022/அ3 நாள்.11.10.2023 |
| | 13. | உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் கடிதம் ந.க.எண்: 4184/2023/அ5, நாள்:28.10.2023 |

-----------

**ஆணைகள் :**

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், மயிலாடும்பாறை கிராமம், மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட வருசநாடு முதல் வாலிப்பாறை வரை 9.72 கி.மீ மாவட்ட ஊரக வளர்ச்சி கட்டுப்பாட்டிலிருந்த தார்ச்சாலையினை 3.75 மீ சாலை தரம் உயர்த்தும் பணிக்காக பார்வை-1ல் காணும் அரசாணையின்படி நெடுஞ்சாலைத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டு, நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் அலகு மதுரை(நெ) கோட்டம், தேனி உட்கோட்டம் மூலமாக சாலைப்பணிகள் நடைபெற்றதாகவும் இச்சாலையில் 2352 மீ நீளமானது (நான்கு பகுதிகளாக) வனத்துறைக்கு கட்டுப்பட்ட பகுதிகளின் வழியே செல்வதால் வனத்துறையின் தடையின்மை சான்று பெற்று சாலை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள பார்வை 2-இல் வருசநாடு வனச்சரக அலுவலரால் தெரிவிக்கப்பட்டதாகவும், மேற்படி தடையின்மை சான்று பெறுவதற்கு 29.10.2019-ல் இணைய வழியில் தேனி முதன்மை வன உயிரின காப்பாளருக்கு விண்ணப்பம் பதிவேற்றம் செய்யப்பட்டதில் வனத்துறைக்கு ஈட்டு நிலம் வழங்கிய பின்னரே இணையவழி விண்ணப்பம் முழுமை பெறும் என்று முதன்மை தலைமை வனபாதுகாவலர் தெரிவித்ததாகவும், மேலும் வனத்துறைக்குட்பட்ட 1.88.18 ஹெக்டேர் நிலத்திற்கு ஈடாக இருமடங்கு மாற்று நிலம் வழங்கிட வேண்டும் என்று வன உயிரின காப்பாளர், மேகமலை வன உயிரினக்கோட்டம், தேனி அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதாகவும், எனவே, சாலைப்பணிகளை தொடர தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டத்தில் வனத்துறைக்கு சொந்தமான இடத்திற்கு அருகில் (போடி வடக்கு மலைக்கிராமம்) வனத்துறைக்கு இரு மடங்கு மாற்று நிலம் வழங்க ஆவண செய்யுமாறு மதுரை நெடுஞ்சாலைத்துறை கோட்டப்பொறியாளரால் பார்வை 4-ல் காணும் கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேற்காணும் பொருள் தொடர்பாக, வனப்பகுதி நிலங்களுக்கு பதிலாக, வனத்துறையினருக்கு மாற்று இடம் வழங்க அரசு புறம்போக்கு நிலம் தேர்வு செய்து வழங்குமாறு சார்நிலை அலுவலர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டதன் பேரில் பார்வை 5 மற்றும் 6-இல் போடிநாயக்கனூர் வட்டம், வடக்குமலை கிராமத்தில் கீழ்க்காணும் விபரப்படி புல எண்கள் தேர்வு செய்யப்பட்டு முன்மொழிவுகள் வரப்பெற்றது.

| வ.எண். | சர்வே எண். | விஸ்தீரணம் (ஹெக்.) | வகைபாடு |
|---|---|---|---|
| 1. | 866 | 1.41.0 | தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு (அனாதீனம்) |
| 2. | 867 | 0.39.5 | தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு (அனாதீனம்) |
| 3. | 869 | 0.34.0 | தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு |
| 4. | 870 | 0.54.0 | தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு |
| 5. | 871 | 1.16.0 | தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு |
| மொத்தம் | | 3.84.5 | |

மேற்படி புல எண்களில் புல எண்கள் 866, 867 ஆகியவை சர்க்கார் தரிசு (அனாதீனம்) வகைபாடு நிலமாதலால் தடையின்மை சான்று வழங்குமாறு சென்னை நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரிடம் கோரப்பட்டதில், பார்வை 7-இல் மேற்காணும் புல எண்கள் தொடர்பாக CLA, DOSS, High Court, Civil Court ஆகிய மேல்முறையீட்டு மன்றங்களில் மேல் முறையீட்டு மனுக்கள் ஏதும் நிலுவையில் இல்லை என்ற விபரம் தெரிவிக்கப்பட்டது.

எனவே, பார்வை 5,6-இன்படி வரப்பெற்ற முன்மொழிவுகள், பார்வை 7-இல் வழங்கப்பட்ட சென்னை நில அளவை & நிலவரித்திட்ட இயக்குநரின் தடையின்மை சான்று மற்றும் தேனி மாவட்ட வருவாய் அலுவலரின் 01.11.2022-ம் நாளிட்ட புலத்தணிக்கை குறிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பார்வை 8-இல் காணும் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணையில் போடிநாயக்கனூர் வட்டம், வடக்குமலை கிராமம், புல எண்கள்.866, 867-ல் மொத்த விஸ்தீரணம் 1.80.5 ஹெக்டேர் தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு (அனாதீனம்) நிலமும் மற்றும் புல எண்கள். 869, 870, 871-ல் மொத்த விஸ்தீரணம் 2.04.00 ஹெக்டேர் தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு நிலமும் ஆக மொத்தம் 3.84.5 ஹெக்டேர் நிலத்தினை ஆண்டிபட்டி வட்டம், வருசநாடு-வாலிப்பாறை சாலை கி.மீ. 0/0 முதல் 9/720 தரம் உயர்த்துதல் பணிக்கு வனத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களுக்கு பதிலாக மாற்று நிலமாக வழங்கி, பிரஸ்தாப புலங்களை அரசு புறம்போக்கு-வனம் என வகைப்பாடு மாற்றம் செய்து உத்தரவிடப்பட்டது.

இந்நிலையில், பார்வை 9-இல் போடிநாயக்கனூர் அனைத்து விவசாயிகள் மற்றும் குத்தகைதாரர்கள் நலச்சங்கம் சார்பில் அளிக்கப்பட்டுள்ள மனுவில் போடி வடக்குமலை கிராமம், சர்வே எண்.866-ல் அருள்மிகு கணவாய் கருப்பசாமி கோவில் அமைந்துள்ளதாகவும், கோவில் மற்றும் நடைபாதை ஆகியவற்றை கிராம கணக்குகளில் அருள்மிகு கணவாய் கருப்பசாமி கோவில் மற்றும் பாதை என மாற்றம் செய்து தருமாறும் மீதம் உள்ள நிலத்தை வனத்துறைக்கு மாற்றம் செய்து வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது.

இந்நேர்வில் பார்வை 10-இல் காணும் கோட்டப்பொறியாளர்(நெ), மதுரை அவர்களின் கடிதத்தில் வருசநாடு-வாலிப்பாறை சாலை மேம்படுத்துதல் பணிக்கு முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் அறிவுரையின்படி வன அனுமதி முன்மொழிவினை Online Forest Clearance Application No.FP/TN/Road/42704/2019-ன்படி PARIVESH Web Portal என்னும் இணையதளத்தில், மயிலாடும்பாறை வருவாய் கிராமம் சர்வே எண்.1432-ல் வ.எண்.1-ன்படியும் மற்றும் மேகமலை வருவாய் கிராமத்தில் சர்வே எண்.280-ல் வ.எண்.2,3,4-ன்படியும் கீழ்க்காணும் விபரப்படி பதிவேற்றம் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | மாவட்டம் | கிராமம் | வனநிலத்தின் விஸ்தீரணம் (ஹெக்.) |
|---|---|---|---|
| 1. | தேனி | வருசநாடு | 0.60.00 |
| 2. | | உருட்டிமேடு | 0.54.40 |
| 3. | | வண்டியூர் | 0.46.72 |
| 4. | | தும்மகுண்டு | 0.27.06 |
| மொத்தம் | | | 1.88.18 |

பார்வை 11-இல் காணும் வனநிலவரித்திட்ட அலுவலரின் அறிக்கையில் 03.05.2023 வருவாய்த்துறை, வனத்துறை மற்றும் வனநிலவரித்திட்ட அலுவலர்களுடன் மேற்காணும் புலங்களை கூட்டுப் புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும், மேலும் துணை இயக்குநர் மற்றும் மாவட்ட வன அலுவலர் அவர்களின் நேரடி அறிவுறுத்தலின்படி 14.06.2023-ல் மாவட்ட வன அலுவலர், துணை இயக்குநர் திருவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம், கண்டமனூர், வருசநாடு, போடிநாயக்கனூர் வனச்சரகர்கள் மற்றும் வனத்துறையினர் ஆகியோருடன் புலத்தணிக்கை செய்யப்பட்டதில் ஒரு சில அளவை கற்கள் மட்டுமே கண்டறியப்பட்டதாகவும், மீண்டும் 15.06.2023 அன்று புல எண்.870, 871 குறித்து மறு புலத்தணிக்கை செய்யப்பட்டதில் புல எண்.870 "தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு" வகைபாடு நிலத்தில் தெற்கு எல்லையை ஒட்டி கணவாய் கருப்பசாமி கோவில் கிழக்கு நோக்கி அமையப்பட்டுள்ளதாகவும், இச்சிலைக்கு வலது பக்கத்தில் அரிவாள், இடது பக்கத்தில் திரிசூலமும், அருகில் இருபுறமும் பைரவர் வாகன சிலைகளும் உள்ளதாகவும் சுமார் 3 அடி உயரத்தில் சுற்றி செங்கற்களில் கட்டப்பட்டுள்ளதாகவும், மேற்கூரை கிடையாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் கருப்பசாமி கோவில் அமையப்பெற்றுள்ள பரப்பு பற்றி தெளிவான அளவீடுகளுடன் குறிப்புகள் ஏதுமில்லை.

எனவே போடிநாயக்கனூர் வட்டம், வடக்குமலை கிராமம், புல எண்கள்.866, 867, 869, 870, 871 ஆகிய புலங்களை புலத்தணிக்கை செய்து பிரஸ்தாப புலத்தில் அமைந்துள்ள கோவில் மற்றும் அதற்குரிய நடைபாதை ஆகியவற்றிற்கான பரப்பு பற்றிய விபரத்தை தெரிவிக்குமாறும், மேற்காணும் பிரஸ்தாப புல எண்களில் கருப்பசாமி கோவில் எந்த புல எண்ணில் அமைந்துள்ளது என்றும், பொதுமக்கள் வழிபாடு நடத்துவதற்கு இக்கோவில் அமைந்துள்ள பரப்பினை மட்டும் ஒதுக்கி விட்டு மீதமுள்ள நிலத்தினை வருசநாடு-வாலிப்பாறை சாலை அமைக்கும் பணிக்கு மேற்படி புல எண்களில் வனத்துறைக்கு மாற்று நிலம் வழங்குவது தொடர்பாக திருத்தப்பட்ட புல வரைபடம் (Revised sketch) மற்றும் திருத்தப்பட்ட அறிக்கை (Revised proposal) ஆகியவற்றினை அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டதில் பார்வை 13, 14-இல் போடிநாயக்கனூர் வட்டாட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், உத்தமபாளையம் ஆகியோரிடமிருந்து திருத்திய அறிக்கை வரப்பெற்றுள்ளது. அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரம் பின்வருமாறு:

"தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், வடக்குமலை கிராமம், புல எண்கள்.866, 867, 869, 870, 871 ஆகியவை கிராமக் கணக்குகளில் கீழ்கண்டவாறு தாக்கலாகியுள்ளது.

| வட்டம் | கிராமம் | புலஎண் | விஸ்தீரணம் (ஹெக்.) | பாகுபாடு |
|---|---|---|---|---|
| போடிநாயக்கனூர் | போடி வடக்குமலை கிராமம் | 866 | 1.41.0 | தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு (அனாதீனம்) |
| | | 867 | 0.39.5 | தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு (அனாதீனம்) |
| | | 869 | 0.34.0 | தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு |
| | | 870 | 0.54.0 | தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு |
| | | 871 | 1.16.0 | தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு |

முன்னதாக, பார்வை 8-இல் காணும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவுபடியாக வனத்துறைக்கு நிலமாற்றம் செய்யப்பட்ட மாற்று நில புல எண்களின் விபரம் பின்வருமாறு:

| தற்போது உள்ளபடி | | | நில மாற்றத்திற்கு பின்பு | | |
|---|---|---|---|---|---|
| புல எண் | விஸ்தீரணம் (ஹெக்டேர்) | பாகுபாடு | புல எண் | விஸ்தீரணம் (ஹெக்டேர்) | பாகுபாடு |
| 866 | 1.41.0 | தீ.ஏ.ச.தரிசு (அனாதீனம்) | 866 | 1.41.0 (முழுபுலம்) | அரசு புறம்போக்கு - வனம் |
| 867 | 0.39.5 | தீ.ஏ.ச.தரிசு (அனாதீனம்) | 867 | 0.39.5 (முழுபுலம்) | |
| 869 | 0.34.0 | தீ.ஏ.ச.தரிசு | 869 | 0.34.0 (முழுபுலம்) | |
| 870 | 0.54.0 | தீ.ஏ.ச.தரிசு | 870 | 0.54.0 (முழுபுலம்) | |
| 871 | 1.16.0 | தீ.ஏ.ச.தரிசு | 871 | 1.16.0 (முழுபுலம்) | |
| மொத்தம் | 3.84.50 | | | 3.84.50 | |

மேற்காணும் அட்டவணையின்படி புல எண்கள். 866, 867, 869, 870 மற்றும் 871 ஆகியவை முழுபுலமாக வனத்துறைக்கு மாற்று நிலமாக வழங்கி உத்தரவிடப்பட்டிருந்த நிலையில், புல எண்.870-ல் கருப்பசாமி கோவில் மற்றும் கோவிலுக்கான பாதை அமைந்துள்ளதால், தற்போது புல எண்.870-ன் மொத்த விஸ்தீரணம் 0.54.0 ஹெக்டேர் நிலத்தில் மட்டும் கீழ்க்காணும் விபரப்படி திருத்தம் செய்து, மேற்படி கோவில் அமைந்துள்ள நிலத்தின் விஸ்தீரணம் 0.01.60 ஹெக்டேர் மற்றும் 5 மீட்டர் அகலமுள்ள பாதை அமைந்துள்ள பரப்பு 0.03.10 ஆக மொத்தம் 0.04.70 ஹெக்டேர் நிலம் போக மீதமுள்ள 0.49.30 ஹெக்டேர் நிலத்தினையும் மொத்தமாக வனத்துறைக்குட்பட்ட 1.88.18 ஹெக்டேர் நிலத்திற்கு இருமடங்கு மாற்று நிலமான 3.76.36 ஹெக்டேர் நிலத்திற்கு குறைவுபடாமல் வனத்துறைக்கு மாற்று நிலமாக வழங்க கீழ்க்கண்ட விபரப்படி உத்தேச உட்பிரிவு செய்யயப்பட்டுள்ளது.

புல எண்.870-ன் உத்தேச உட்பிரிவு விபரம் பின்வருமாறு :

| தற்போது உள்ளபடி | | | நில மாற்றத்திற்கு பின்பு | | |
|---|---|---|---|---|---|
| புல எண் | விஸ்தீரணம் (ஹெக்டேர்) | பாகுபாடு | புல எண் | விஸ்தீரணம் (ஹெக்.) | பாகுபாடு |
| 870 | 0.54.0 | தீ.ஏ.ச.தரிசு | 870/1 | 0.40.70 | அரசு புறம்போக்கு காடு / வனம் |
| | | | 870/2 | 0.01.60 | தீ.ஏ.ச.தரிசு (கணவாய் கருப்பசாமி கோவில்) |
| | | | 870/3 | 0.03.10 | தீ.ஏ.ச.தரிசு (பாதை) |
| | | | 870/4 | 0.08.60 | அரசு புறம்போக்கு காடு / வனம் |
| மொத்தம் | 0.54.0 | | | 0.54.0 | |

மேற்காணும் உத்தேச உட்பிரிவானது போடிநாயக்கனூர் வட்டாட்சியர் அலுவலக முன்கூராய்வு தணிக்கை பதிவேடு வரிசை எண்.08/2023 நாள்.11.10.2023-ன்படி போடிநாயக்கனூர் வட்டத்துணை ஆய்வாளர் (நிலஅளவை)/வட்டாட்சியர் ஆகியோரால் முன்கூராய்வு தணிக்கை செய்யப்பட்டுள்ளது.

எனவே, போடிநாயக்கனூர் வட்டம், போடி வடக்கு மலை கிராமத்தில், புல எண்கள். 866, 867, 869, 870 மற்றும் 871 ஆகியவற்றில் மொத்த விஸ்தீரணம் 3.79.80 ஹெக்டேர் நிலம் கீழ்க்காணும் விபரப்படி வனத்துறைக்கு மாற்று நிலமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| கிராமம் | நில மாற்றத்திற்கு பின்பு | | | |
|---|---|---|---|---|
| | புல எண் | உத்தேச உட்பிரிவு எண் | விஸ்தீரணம் (ஹெக்டேர்) | பாகுபாடு |
| போடி வடக்குமலை | 866 | -- | 1.41.0 | அரசு புறம்போக்கு காடு / வனம் |
| | 867 | - | 0.39.5 | |
| | 869 | -- | 0.34.0 | |
| | 871 | -- | 1.16.0 | |
| | 870 | 870/1 | 0.40.70 | |
| | | 870/3 | 0.08.60 | |
| மொத்தம் | | | 3.79.80 | |

நில மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள பிரஸ்தாப புலங்களின் நான்குமால் விவரம்:

| புல எண். | உத்தேச உட்பிரிவு எண் | நான்கு எல்லைகள் | | | |
|---|---|---|---|---|---|
| | | வடக்கு | கிழக்கு | தெற்கு | மேற்கு |
| 866 | -- | 950 மலை | 867 | 950 மலை | 950 மலை |
| 867 | -- | 866 | 950 மலை | 868 | 950 மலை |
| 869 | -- | 868 | 950 மலை | 870 | 950 மலை |
| 871 | -- | 865 | 950 மலை | 950 மலை | 950 மலை |
| 870 | 870/1 | 869 | 950 மலை | 870/2, 870/3, 950 மலை | 950 மலை |
| | 870/4 | 870/3 | 870/2 | 950 மலை | 870/3 |

ஆண்டிபட்டி வட்டம், வருசநாடு-வாலிப்பாறை சாலை தரம் உயர்த்துதல் பணிக்கு பரிந்துரைக்கப்பட்ட போடிநாயக்கனூர் வட்டம், போடி வடக்கு மலை கிராம புல எண்கள். 866, 867, 869, 870 மற்றும் 871 ஆகியவை பஞ்சமருக்கென ஒதுக்கப்பட்ட பட்டியலில் இடம்பெறவில்லை, மேலும் தடையாணை புத்தகத்தில் பதிவு செய்யப்படவில்லை.

மேலும், இப்பொருள் தொடர்பாக, போடி வடக்கு மலை கிராமத்தில், "அ1" நோட்டீஸ் 30.06.2023 முதல் 15.07.2023 வரை பிரசுரம் செய்யப்பட்டு குடிகள் அத்தாட்சி பெறப்பட்டதில் ஆட்சேபணைகள் ஏதும் வரப்பெறவில்லை. மேலும் இந்நிலமாற்றத்திற்கு சம்மதம் தெரிவித்து போடி வடக்குமலை கிராம பொதுமக்கள் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

அரசாணை எண்.633 வருவாய்த்துறை நாள்:31.10.2007-ல் தெரிவிக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி, இந்நிலமாற்றம் மாநில அரசுத்துறைக்கான நிலமாற்றம் என்பதால் நிலமாற்றம் செய்ய உத்தேசித்துள்ள நிலத்தின் தற்கால சந்தை மதிப்பினை கணக்கீடு செய்வதற்கு வழிகாட்டி பதிவேட்டின்படியான மதிப்பு அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்படி போடி வடக்கு மலை கிராமம், சர்வே எண்கள்.866, 867, 869, 870, 871-க்கு போடிநாயக்கனூர் சார்பதிவாளர் அலுவலக வழிகாட்டி பதிவேட்டின்படி நிலமதிப்பு கோரப்பட்டதில் பிரஸ்தாப புலங்களானது "தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு" என உள்ளதால் பிரஸ்தாப புலத்திற்கான வழிகாட்டி பதிவேட்டின் மதிப்பு இல்லை. எனவே, அதன் அருகில் உள்ள புலமான புல எண்கள்.865, 875-க்கு போடிநாயக்கனூார் சார்பதிவாளர் அலுவலக வழிகாட்டி மதிப்பு கோரப்பட்டதில், புல எண்கள்.865, 875 ஆகியவை "புஞ்சை மானாவாரி" வகை-1 என்ற வகைபாட்டில் உள்ளதால் அதன் மதிப்பு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.67,000/- என உள்ளதாக போடிநாயக்கனூர் சார்பதிவாளரால் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி நிலமாற்றம் செய்ய உத்தேசித்துள்ள 3.79.80 ஹெக்டேர் "தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு(அனாதீனம்)" மற்றும் "தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு" நிலத்திற்கு நிலமதிப்பு ரூ.6,28,460/- என கீழ்க்கண்ட விபரப்படி உள்ளது.

| சர்வே எண். | விஸ்தீரணம் (ஹெக்.) | மொத்த விஸ்தீரணம் | நிலமதிப்பு விபரம் |
|---|---|---|---|
| 866 | 1.41.00 | 3.79.80 ஹெக்டேர் | ஏக்கர் ஒன்றுக்கு ரூ.67,000/- |
| 867 | 0.39.50 | | |
| 869 | 0.34.00 | | |
| 870/1 & 870/4 | 0.40.70 & 0.08.60 | | 9 ஏக்கர் 38 செண்ட்-க்கு மதிப்பு ரூ.6,28,460/- (2.471 ஏக்கர் x 3.79.80 ஹெக். = 9.38 ஏக்கர்) (9.38 ஏக்கர் x ரூ.67,000/ = ரூ.6,28,460/-) |
| 871 | 1.16.00 | | |
| மொத்தம் | 3.79.80 | | |

எனவே, மேற்கண்டவாறு பரிந்துரைக்கப்பட்ட புலத்திற்கான நில மதிப்பாக ரூ.6,28,460/- (ரூபாய் ஆறு இலட்சத்து இருபத்தெட்டாயிரத்து நானூற்று அறுபது மட்டும்) என நிர்ணயம் செய்யலாம்" என போடிநாயக்கனூர் வட்டாட்சியர் மற்றும் உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் அறிக்கை செய்துள்ளனர்.

மேலும், அரசாணை (நிலை) எண்.503 வருவாய் (நி.மு.4-1) துறை நாள்.21.09.1999-ல் "சுகாதாரம் மற்றும் கல்வித்துறைகளுக்கு நிலம் தேவைப்படும்போது நீர்நிலைப் புறம்போக்கு போன்ற தடையாணைக்குட்பட்ட நிலங்கள் நீங்கலாக ஏனைய இதர நிலங்களை, கேட்புத்துறைகளுக்கு நிலமதிப்பு வரம்பின்றி (No Ceiling of Land) வழங்கவும் மற்றும் காவல்துறையின் காவல் நிலையம், காவலர் குடியிருப்பு, காவலர் பயிற்சி முகாம் மற்றும் மைதானம், போக்குவரத்து துறையின் வட்டார போக்குவரத்து அலுவலகம் போன்ற மற்ற அரசுத் துறையின் தேவைகளுக்கும் தேவையான குறைந்த பட்ச நிலப்பரப்பினை மாவட்ட ஆட்சியாளர் அளவில் பொதுப்பணித்துறை மற்றும் சம்பந்தப்பட்ட துறையைக் கலந்தாலோசித்து நிலமதிப்பு வரம்பின்றி வழங்கவும் மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கி அரசு ஆணை பிறப்பிக்கிறது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பார்வை 12 மற்றும் 13-இன்படி வரப்பெற்ற திருத்தப்பட்ட அறிக்கையின் அடிப்படையிலும், ஆண்டிபட்டி வட்டம், வருசநாடு-வாலிப்பாறை சாலை கி.மீ.0/0 முதல் 9/720 தரம் உயர்த்துதல் பணிக்கு, மேற்படி சாலையின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டும், பார்வை 8-இல் காணும் உத்தரவுப்படி போடிநாயக்கனூர் வட்டம், வடக்குமலை கிராமம், புல எண்கள் 866, 867-ல் மொத்த விஸ்தீரணம் 1.80.5 ஹெக்டேர் "தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு(அனாதீனம்)" நிலமும் மற்றும் புல எண்கள்.869, 870, 871-ல் மொத்த விஸ்தீரணம் 2.04.00 ஹெக்டேர் "தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு" நிலமும் ஆக மொத்தம் 3.84.5 ஹெக்டேர் நிலத்தினை வனத்துறைக்கு மாற்று நிலமாக வழங்கியும் பிரஸ்தாப புலங்களை "அரசு புறம்போக்கு-வனம்" என வகைபாடு மாற்றம் செய்து உத்தரவிடப்பட்ட மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணையில் புல எண்.870-இல் திருத்தம் செய்து, போடிநாயக்கனூர் வட்டம், வடக்கு மலை கிராமம், புல எண்.870-இல் மொத்த விஸ்தீரணம் 0.54.00 ஹெக்டேர் நிலத்தில், உத்தேச உட்பிரிவு எண்.870/2-இல் விஸ்தீரணம் 0.01.60 ஹெக்டேர் நிலத்தினை "தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு" குறிப்புக் கலத்தில் "கணவாய் கருப்பசாமி கோவில்" என்றும், புல எண்.870-இல் உத்தேச உட்பிரிவு எண்.870/3-இல்

0.03.10 ஹெக்டேர் நிலத்தினை "தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு" குறிப்புக் கலத்தில் "பாதை" என வருவாய் கணக்குகளில் மாற்றம் செய்யவும் வட்டாட்சியருக்கு உத்தரவிடப்படுகிறது.

| தற்போது உள்ளபடி | | | நில மாற்றத்திற்கு பின்பு | | |
|---|---|---|---|---|---|
| புல எண் | விஸ்தீரணம் (ஹெக்டேர்) | பாகுபாடு | புல எண் | விஸ்தீரணம் (ஹெக்.) | பாகுபாடு |
| 870 | 0.54.0 | தீ.ஏ.ச.தரிசு | 870/1 | 0.40.70 | அரசு புறம்போக்கு காடு / வனம் |
| | | | 870/2 | 0.01.60 | தீ.ஏ.ச.தரிசு (கணவாய் கருப்பசாமி கோவில்) |
| | | | 870/3 | 0.03.10 | தீ.ஏ.ச.தரிசு (பாதை) |
| | | | 870/4 | 0.08.60 | அரசு புறம்போக்கு காடு / வனம் |
| மொத்தம் | 0.54.0 | | | 0.54.0 | |

மேலும், ஆண்டிபட்டி வட்டம், வருசநாடு-வாலிப்பாறை தரம் உயர்த்துதல் பணிக்காக, வனத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 1.88.18 ஹெக்டேர் நிலத்திற்கு பதிலாக இருமடங்கு மாற்று நிலமான (1.88.18 ஹெக். x 2 = 3.76.36 ஹெக்) 3.76.36 ஹெக்டேர் நிலத்திற்காக போடிநாயக்கனூர் வட்டம், வடக்கு மலை கிராமத்தில் கீழ்க்காணும் விபரப்படி 3.79.80 ஹெக்டேர் நிலத்தினை வனத்துறையினருக்கு மாற்று நிலமாக வழங்கி பிரஸ்தாப புலங்களை "அரசு புறம்போக்கு-வனம்" என வகைபாடு மாற்றம் செய்து திருத்திய உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

| வட்டம் : போடிநாயக்கனூர் | | | | கிராமம் : போடி வடக்குமலை | | | |
|---|---|---|---|---|---|---|---|
| திருத்தத்திற்கு முன்பு | | | | திருத்தத்திற்கு பின்பு | | | |
| | சர்வே எண். | விஸ்தீரணம் (ஹெக்.) | வகைபாடு | சர்வே எண். | உத்தேச உட்பிரிவு எண். | விஸ்தீரணம் (ஹெக்.) | வகைபாடு |
| 1. | 866 | 1.41.00 | தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு (அனாதீனம்) | 866 | -- | 1.41.00 | அரசு புறம்போக்கு - காடு/வனம் |
| 2. | 867 | 0.39.50 | | 867 | -- | 0.39.50 | |
| 3. | 869 | 0.34.00 | தீர்வை ஏற்பட்ட சர்க்கார் தரிசு | 869 | -- | 0.34.00 | |
| 4. | 871 | 1.16.00 | | 871 | -- | 1.16.00 | |
| 5. | 870 | 0.54.00 | | 870 | 870/1 | 0.40.70 | |
| | | | | | 870/4 | 0.08.60 | |
| மொத்தம் | | 3.84.50 | | | | 3.79.80 | |

மேலும், மேற்காணும் புலங்களை வனத்துறைக்கு சுவாதீனம் வழங்கியும் கிராம, வட்ட மற்றும் கணினியில் மாறுதல் செய்தும் அறிக்கை சமர்ப்பிக்க போடிநாயக்கனூர் வட்டாட்சியருக்கு உத்தரவிடப்படுகிறது.

ஒம்./ஆர்.வி.ஷஜீவனா
மாவட்ட ஆட்சித்தலைவர்,
தேனி.

/உ.ந.உ.ப./

மாவட்ட ஆட்சியருக்காக

**பெறுநர்:**

1.கோட்டப்பொறியாளர்(நெ),
நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், மதுரை.

2.வனஉயிரினக் காப்பாளர்,
மேகமலை வனஉயிரினக் கோட்டம்,
தேனி.

**நகல்:-**

1. வருவாய் கோட்டாட்சியர்,
உத்தமபாளையம் — தக்க நடவடிக்கைக்காக,
2. வட்டாட்சியர்,
போடிநாயக்கனூர்.
3. உதவிக் கோட்டப்பொறியாளர்,
நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்,
8, கஸ்தூரிபாய் தெரு,
என்.ஆர்.டி.நகர், தேனி.
4. "ஆ3" இருப்புக் கோப்பிற்கு
5. சம்பந்தப்பட்ட கோப்பிற்கு

District : Theni

Taluk : Bodinayakkanur

Village : (Bodi) North Hills [2]

Survey No : 870


Area : Hect 00 Ares 54.00

Scale : 1 : 1000

பரப்பு

870/1 : 0.40.70
2 : 0.01.60
3 : 0.03.10
4 : 0.08.60
0.54.00

பரப்பு சரிபார்க்கப்பட்டது
11/10/23




மேல்சர்ராய்வு எண்: 08 11/10/2023
சர்ந்தாய்வு செய்யப்பட்டது
11/10/23
துணை ஆய்வாளர்
போடிநாயக்கனூர்
11/10/23

வட்டாட்சியர்,
போடிநாயக்கனூர்
11/10/2023
11/10/23

11-10-23
குறுவட்ட அளவர்
போடிநாயக்கனூர் குறுவட்டம்
போடிநாயக்கனூர் வட்டம்

மாவட்டம் : தேனி    வட்டம் : போடிநாயக்கனூர்    கிராமத்தின் பெயர் : போடி (வடக்குமலை)    கிராமத்திய சப்டிவிஷன் ஸ்டேட்மெண்டு

| புஞ்சை, நஞ்சை புறம்போக்கு (2) | சர்வே விஸ்தீர்ணம் (3) | தீர்வை (4) | இப்போதுள்ள ரிஜிஸ்டரான கைப்பத்துதாரர்களின் பெயர் (5) | புஞ்சை, நஞ்சை புறம்போக்கு (6) | சப்டிவிஷன் நெம்பர் / லெட்டர் (7) | ஏரியா ஸ்கொயர் விஸ்தீர்ணம் ஹெ. ஏர் (8) | (3)வது காலத்தை அனுசரித்து சரிகட்டின் விஸ்தீர்ணம் ஹெ. ஏர் (9) | தீர்வை ரூ. பை (10) | ரிஜிஸ்தர் செய்ய உத்தேசித்திருக்கும் கைப்பத்துதாரர்களுடைய நெம்பர்களும், பெயர்களும் (11) | கட்சிக்காரர்களின் கையெழுத்து (12) | பூமியில் சரியான அத்து இருக்கின்றதா? தேவையான இடத்தில் கல் நடப்பட்டிருக்கின்றதா? (13) | (12)வது காலத்தில் கட்சிக்காரர்கள் கையெழுத்து செய்யவிட்டால் அதற்கு காரணம் (14) | சப்-டி.விஷன் செய்யக் காரணம் (15) | ஒன்று சேர்க்க கூடிய சப்டிவிஷன் அவைகளை ஒன்று சேர்ப்பதற்கு ஆட்சேபனை உண்டா என்பதை குறிக்கவும் (16) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஒ.4 | 0.54.00 | 2.66 | காடு | ஒ.4 | 870-1 | 0.40.70 | 0.40.70 | 2.00 | காடு | | | | | |
| | | | | | -2 | 0.01.60 | 0.01.60 | 0.10 | கோவைபாய் கருப்பசாமி கோவில் | | | | | |
| | | | | | -3 | 0.03.10 | 0.03.10 | 0.20 | பாறை | | | | | |
| | | | | | -4 | 0.08.60 | 0.08.60 | 0.50 | காடு | | | | | |
| | | | | | | 0.54.00 | 0.54.00 | 2.80 | | | | | | |

மேல்சோராய்வு எண்: 08 /11/10/2023
சோர்ந்தாய்வு செய்யப்பட்டது
(கையொப்பம்) 11/10/23

ம: அழகேசன் 11/10/23
வட்டாட்சியர்,
போடிநாயக்கனூர்
(கையொப்பம்) 11/10/23

(கையொப்பம்) 11-10-23
குறுவட்ட அளவர்
போடிநாயக்கனூர் குறுவட்ட
போடிநாயக்கனூர் வட்டம்